©
தமிழ்நாடு அரசு
2022

பதிவெண்: எம். 3

# சேலம் மாவட்ட அரசிதழ்

சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

சேலம், ஜூன் 1, 2022
[சுபகிருது, வைகாசி 18 - திருவள்ளுவர் ஆண்டு 2053] [எண் 15

## உள்ளாட்சித்துறை அறிவிக்கை

[ந. க. எண். 1809 / 2022 / (அ-1), நாள்: 23.05.2022]

### சொத்துவரி / காலிமனைவரி பொது சீராய்வு -2022

அறிவிக்கை

1. நகர் மன்ற தீர்மான எண்.23, நாள்: 11.04.2022

2. நகர் மன்ற தீர்மான எண்.40, நாள்: 23.05.2022

ஆகியவற்றின்படி அங்கீகரிக்கப்பட்டது.

மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளிலும் 01.04.2022 முதல் சொத்துவரி / காலிமனை வரி சீராய்வு செய்து வரி உயர்வு செய்ய மண்டல அடிப்படை மதிப்பு உயர்வு செய்தது பற்றிய அறிவிக்கை.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 82ன் படியும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை அரசாணை எண்.52, நாள்: 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கைபடி, 01.04.2022 முதல் சொத்துவரி / காலிமனை வரி சீராய்வு மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்காணும் விவரப்படி மேட்டூர் நகராட்சிக்கானசொத்துவரி விதிப்பு / காலிமனை வரி விதிப்பு மண்டல அடிப்படை மதிப்பு உயர்வு செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

குடியிருப்பு கட்டடங்கள்

| சதுர அடி விவரம் | A ZONE தற்போதுள்ள மண்டல மதிப்பு | A ZONE காரணி | A ZONE திருத்தி அமைக்கப்படும் மண்டல மதிப்பு | B ZONE தற்போதுள்ள மண்டல மதிப்பு | B ZONE காரணி | B ZONE திருத்தி அமைக்கப்படும் மண்டல மதிப்பு | C ZONE தற்போதுள்ள மண்டல மதிப்பு | C ZONE காரணி | C ZONE திருத்தி அமைக்கப்படும் மண்டல மதிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) (ரூ.) | (3) | (4) (ரூ.) | (5) (ரூ.) | (6) | (7) (ரூ.) | (8) (ரூ.) | (9) | (10) (ரூ.) |
| <=600 | 1.50 | 1.25 | 1.88 | 0.90 | 1.25 | 1.13 | 0.60 | 1.25 | 0.75 |
| 601–1200 | 1.50 | 1.5 | 2.25 | 0.90 | 1.5 | 1.35 | 0.60 | 1.5 | 0.90 |
| 1201–1800 | 1.50 | 1.75 | 2.63 | 0.90 | 1.75 | 1.58 | 0.60 | 1.75 | 1.05 |
| >1800 | 1.50 | 2.00 | 3.00 | 0.90 | 2.00 | 1.80 | 0.60 | 2.00 | 1.20 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்

| சதுர அடி விவரம் | A ZONE தற்போதுள்ள மண்டல மதிப்பு | A ZONE காரணி | A ZONE திருத்தி அமைக்கப்படும் மண்டல மதிப்பு | B ZONE தற்போதுள்ள மண்டல மதிப்பு | B ZONE காரணி | B ZONE திருத்தி அமைக்கப்படும் மண்டல மதிப்பு | C ZONE தற்போதுள்ள மண்டல மதிப்பு | C ZONE காரணி | C ZONE திருத்தி அமைக்கப்படும் மண்டல மதிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) (ரூ.) | (3) | (4) (ரூ.) | (5) (ரூ.) | (6) | (7) (ரூ.) | (8) (ரூ.) | (9) | (10) (ரூ.) |
| தொழிற்சாலை பயன்பாடு கட்டடங்கள் | 1.50 | 1.75 | 2.63 | 0.90 | 1.75 | 1.58 | 0.60 | 1.75 | 1.05 |
| வணிக பயன்பாடு கட்டடங்கள் | 1.50 | 2.00 | 3.00 | 0.90 | 2.00 | 1.80 | 0.60 | 2.00 | 1.20 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.50 | 1.75 | 2.63 | 0.90 | 1.75 | 1.58 | 0.60 | 1.75 | 1.05 |

காலிமனை வரி சீராய்வு

காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு அடிப்படை மதிப்பு கீழ்க்கண்டவாறு உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரிவிதிப்பு செய்யப்படும்.

| மண்டலம் | சதுர அடிக்கான அடிப்படை மதிப்பு | |
|---|---|---|
| | தற்போதைய அடிப்படை மதிப்பு | 01.04.2022 முதல் உயர்வு செய்யப்பட்ட அடிப்படை மதிப்பு |
| (1) | (2) | (3) (ரூ.) |
| A | 0.15 | 0.30 |
| B | 0.20 | 0.40 |
| C | 0.30 | 0.60 |

மேலும் மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்பந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

1) 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்
2) 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்
4) 1800 சதுர அடிக்கு அதிகமான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்
5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100% உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்

தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில் ஆண்டுதோறும் 6 சதவீதம் உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்படும்.

மேலும் மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor Rate i.e Rate of Taxation) ஏற்கனவே உள்ளவாறு 10.75 சதவீதமாகவே உள்ளது. மேற்கண்ட மண்டல அடிப்படை வரி உயர்விற்கு நகர்மன்ற தீர்மான எண்.23 நாள்: 11.04.2022 மற்றும் நகர்மன்ற தீர்மான எண்.40 நாள்: 23.05.2022 ஆகியவற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர்,
23-05-2022.

(ஒ.இ.) X X X,
ஆணையாளர்,
மேட்டூர் நகராட்சி,
சேலம் மாவட்டம்.

தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் சேலம் அரசினர் கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.